இதழ்-2
May 2010

MONTHLY JOURNAL OF SEWALANKA FOUNDATION

# Internal News Letter
# உள்ளக செய்தி மடல்

SEWALANKA FOUNDATION
BATTICALOA

No 47, Koolavady Lane, Koolavady. T.P 0652224778



இந்த இதழில்

ஆரம்ப உரை, மீள்பார்வை P.1
மாவட்டச்செய்தி P.2
திட்டங்கள் பற்றிய பார்வை P.4
ஒரு கிராமத்தின் வரலாறு P.6



## ஆரம்ப உரை

சேவாலங்கா மன்றத்தின் மே,ஜீன் மாதங்களிலான செயற்பாடுகளை விபரிக்கும் இதழாக இம்மடல் வெளிவருகின்றது. இம்மாதத்தில் திட்ட செயற்பாடுகளின் சிறப்பான நிகழ்வுகளுடன் மாவட்ட உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் விதமான செயற்பாடுகளும் நடைபெற்றன. இம்மாதங்களின் செயற்பாடுகளின் விபரங்களை உரிய தலைப்புக்களில் நீங்கள் விபரமாக காணலாம்.



## மீள்பார்வை (நெசவுத்தொழில் புத்துயிர்)

எமது நிறுவனம் எல்லாத்துறைகளிலும் மக்களுக்குத்தேவையான தேவை-களை நிறைவேற்றுவதில் சுனாமியின் பின் கூடிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

பாலமுனை கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ளது. 100% முஸ்லீம்களை கொண்ட இக்கிராமத்தில் பிரதான தொழில்களில் ஒன்றாக நெசவும் காணப்பட்டது. சுனாமியால் முற்றாக அழிந்து போன இத்தொழில் எமது நிறுவனத்தினால் புத்துயிர் ஊட்டப்பட்டது.

USAID நிறுவன நிதி பங்களிப்பில் கிராம மக்களுக்கு தொழிலுக்கான வாழ்வாதார செயற்பாடு மேம்படுத்தப்பட்டு தற்போது அம்மக்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் 54 கைத்தறி 54 நூல் சுற்றும் இயந்திரம், 5 பா ஓடும் இயந்திரம், களஞ்சிய அறை, தொழிலுக்கான மூலதனம் அனைத்தும் வழங்கப்பட்டன. சிறப்பான இத்திட்டத்தின் வெளிப்பாடு அம்மக்கள் தற்போதும் அத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பெண்களே அதிகமாக ஈடுபடும் அங்கு உற்பத்தியாக நெசவுச்சாறி உற்பத்தி செய்கின்றனர்.



# மாவட்டச்செய்தி



**தலமைக்காரியாலய வருகை**

தலமைக்காரியாலயத்தினதும் மாவட்ட காரியாலயத்தினதும் தொடர்பினை அதிகரிக்கும் விதமாக தலமைக்காரியாலய உத்தியோகத்தர்களது வருகை மே மாதம் இடம்பெற்றது. மாவட்ட காரியாலயத்தின் அழைப்பிற்கு அமைய தலமைக்காரியாலயத்தின் உதவித்தலைவர் வசந்த ராமநாயக்க, நிதிப்பணிப்பாளர் திரு. சம்பத், உதவி மனிதவளப்பணிப்பாளர் உட்பட தலமைக்காரியாலய ஊழியர்களும் வருகை தந்திருந்தனர்.



**இசைநிகழ்ச்சி**

தலமைக்காரியாலய அலுவலர்களை வரவேற்கும் விதமாக அன்றய இரவு இசை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் தழிழ் சிங்களப்பாடல்களுடன் உதவித்தலைவர் அவர்களின் உரையும் இடப்பெற்றது.

**கிரிக்கட் சுற்றுப்போட்டி**

தலைமைக்காரியாலயத்திற்கும் மாவட்ட காரியாலயத்திற்கும் இடையிலான சிநோகபூர்வமான சுற்றுப்போட்டி ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்வுக்கு ஓட்டமாவடி நகரசபை தலைவர், மற்றும் நகரசபை உதவித்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.



**காயங்கேணி கடற்கரை**

கிறிக்கட் சுற்றுப்போட்டியின் பின் அனைவரும் வாகரைப் பிரதேச காயங்கேணி கடற்கரைப்பிரதேசத்தில் பகலுணவு வழங்கப்பட்டன. உடன் சமைக்கப்பட்ட உணவுகள் பரிமாறப்பட்ட அன்றய நாள் அனைவரது உறவுகளையும் வளர்க்கும் விதமாக அமைந்திருந்தது.



**மாவட்ட திட்டமிடல் நிகழ்வு**

மாவட்ட காரியாலயத்தின் வருடத்திற்கான திட்டமிடல் நிகழ்வு மே மாதம் இடம்பெற்றது. இத்திட்டத்தினை தயாரிப்பதற்கான உத்தியோகத்தர்களுடனான பங்கேற்பு நிகழ்வு நடாத்தப்பட்டது.

இத்திட்டமிடல் நிகழ்வின் ஊடாக மாவட்டத்தின் நிலையான தன்மை ஸ்திரப்படுத்தும் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டது. குழச்செயற்பாடுகள் மூலம் திட்டமிடலுக்கான செயற்பாடுகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு மாவட்ட திட்டமிடல் வரையப்பட்டது.

நிகழ்வின் ஊடாக மாவட்டத்தின் திட்டமிடல் செயற்பாடுகளை உத்தியோகத்தர்கள் விளங்கிக்கொண்டதோடு அதற்கான ஒத்துழைப்பினை வழங்குவதற்கான உணர்வினையும் பெற்றுக்கொண்டனர்.

# SA-NSA




ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் (NSA திட்டத்தில்) கிராம மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறுபட்ட CBO, வலுவூட்டல் செயற்பாடுகளுள் தொடர்புடையதும் அது சார்பான ஏனைய விடயங்களும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சேவை வழங்குனர் புத்தகம் கையளிப்பு

NSA திட்டத்தின் கீழ் 54 அமைப்புக்கள் மற்றும் 6 பிரதேச செயலகங்கள் போன்றவற்றுக்கு வழங்கப்பட்டன, இக்கையேடானது நிறுவனத்தின் சிறப்பான செயற்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்றது. மாவட்டத்தின் 23 சேவை வழங்குனரால் வழங்கப்படக்கூடிய சேவைகளை விபரிப்பதற்காக இவ்வேடு இமையப்பெற்றுள்ளது. கிராம மட்ட அமைப்புக்கள் உட்படட ஏனையவர்களும் பயன்படுத்த கூடிய வகையில் இந்நூல் அமையப்பெற்றுள்ளது ஒரு சிறப்பான விடயமாகும்.

NSA திட்டத்தின் கீழ் 54 அமைப்புக்கள் மற்றும் 6 பிரதேச செயலகங்கள் போன்றவற்றுக்கு வழங்கப்பட்டன, இக்கையேடானது நிறுவனத்தின் சிறப்பான செயற்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்றது. மாவட்டத்தின் 23 சேவை வழங்குனரால் வழங்கப்படக்கூடிய சேவைகளை விபரிப்பதற்காக இவ்வேடு இமையப்பெற்றுள்ளது. கிராம மட்ட அமைப்புக்கள் உட்படட ஏனையவர்களும் பயன்படுத்த கூடிய வகையில் இந்நூல் அமையப்பெற்றுள்ளது ஒரு சிறப்பான விடயமாகும்.




ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட NSA திட்டத்தில் உள்ளடங்கும் RDS,WRDS,FO ஆகிய சங்கங்களுக்கு சேவை வழங்குனர் புத்தகத்தினை அப்பிரதேச செயலாளர் முன்னிலையில் அச்சங்கங்களுக்கு 04.05.2010 அன்று வழங்கப்பட்டது.

04.05.2010 அன்று வெல்லாவெளிப்பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட RDS,WRDS, ஆகிய சங்கங்களுக்கு இப்பிரதேச செயலாளர் திரு.உ உதயசிறிதரன் அவர்களின் தலமையில் சேவைவழங்குனர் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

இவ் இரண்டு மாத காலப்பகுதியில் வெல்லாவெளி, காத்தான்குடி, செங்கலடி, வாழைச்சேனை, கிரான் உட்பட 5 பிரதேசங்களில் உள்ள 42 அமைப்புகளுக்கும் அப்பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டது.

### ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் வருகை



07.05.2010 அன்று EU இல் இருந்து வருகை தந்தவர்கள் வெல்லாவெளி பிரதேச பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனை RDS, பாலயடிவட்டை WRDS ஆகிய கிராமங்களை மதிப்பிடும் நோக்கத்துடன் வருகை தந்திருந்தனர்.

### கிராம மட்ட அமைப்புக்களுக்கான இணைப்புக்கூட்டம்

10.05.2010 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளடங்கும் CBO க்களை ஒன்றிணைத்து இவ் இணைப்புக்கூட்டம் இடப்பெற்றது. இதில் உதவி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வினுராஜ் கலந்திருந்தார்.
05.05.2010 அன்று இம்மாவட்டத்தில் NSA திட்டத்தில் உள்ளடங்கும் குழுக்களை ஒன்றிணைத்தும் ஓர் இணைப்புக்கூட்டம் இடம்பெற்றது. இதில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் திரு.ருக்சாந்தன் அவர்களால் சேவை வழங்குனர் கையேடு கையளிக்கப்பட்டது.

# FCA



பின்லாந்து நாட்டின் FCA நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள முரண்பாடுகளால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜீன் மாதத்தின் ஆரம்பத்தில்இருந்து ஆரம்பிக்கப்ட்ட இத்திட்டத்தின் ஊடாக வாழ்வாதார சமூக சம்பிரதாய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேற்படி திட்டத்திற்கான நிதி வழங்குனர் ஏற்கனவே சுனாமியால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம், அரை நிரந்தர வீடு, வாழ்வாதாரம், கட்டுமானங்களுக்கான உதவிகளையும் செய்துள்ளனர்.

இத்திட்டத்திற்கான திட்ட விபரங்கள் கீழே உள்ளன.

---

**பிரதேச செயலகப் பிரிவு**

- வவுணதீவு
- பட்டிப்பளை – கொக்கட்டிச்சோலை GN, சேனைவளவு கிராமம்.
- மண்முனை வடக்கு
- காத்தான்குடி

---



**திட்டச்செயற்பாடு**

- பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதார உதவி (தையல் இயந்திரம், ஆடு, கோழி, மற்றும்)
- வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பினை சொந்த இடமாக கொண்டவர்களை மீண்டும் இவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்தியவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கல்.

EG: மாடு, கோழி, விவசாய உதவிகள், சிறு வியாபார உதவிகள்.

- இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசத்திற்கு உட்பட்ட பிரிவுகளில் மனித உரிமைகள் Civil rights, Child rights நடைமுறைப்படுத்தல்.
- வலது குறைந்த இல்லம் ஒன்றிற்கான உதவி வழங்கல்.

காத்தான்குடி – (ஷாஹிரா வலது குறைந்தோர் இல்லத்திற்கு……

1. Children Park திருத்தம் (சிறியளவில்)
2. மலசலகூட திருத்தம் (சிறியளவில்)
3. சத்துணவு வழங்கல்
4. கல்வி சார்ந்த நடவடிக்கைகள்
5. பொழுது போக்கு சாதனம் வழங்கல்.



- இப்பிரதேசங்களில் சமாதானம் சார்ந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
  1. சமயம் சார்ந்த வெளியிட முக்கிய ஸ்தலங்களை தரிசித்தல்.
  2. அனைத்து இன மக்களையும் உள்ளடக்கியதான விளையாட்டு போட்டிகள்.
  3. சமாதானம், சகவாழ்வு சம்பந்தமான பயிற்சி வழங்கல்.

---

# ACAP



ஜீன், ஜீலை மாதங்களில் ACAP திட்டத்தின் ஊடாக முன்னேற்றகரமான திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் நடைபெற்றன.

இம்மாதத்தில் இத்திட்டத்தில் அடிப்படை விடயமான மக்கள் பங்கேற்புடனான சேவைக்கணிப்பீடு 4 பிரதேச செயலக பிரதேசங்களில் 7 நிகழ்வுகழ் நடைபெற்றன. விலாந்தோட்டம், ஆணித்தியமலை, நவகிர-நகர், கோப்பாவெளி, பண்டாரியாவெளி, கிதுல்வெவ, நெடிமடு போன்ற பிரதேசங்களில் PNA நிகழ்வுகள் நடைபெற்றன.

நடைபெற்ற PNA நிகழ்வுகளிலிருந்து கிராமத்திற்கான (GDP) கிராம மட்ட அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய பிரதேச செயலகங்களில் விளங்கப்படுத்தப்பட்டது.

இவ் PNA மூலம் கிராமத்தின் பிரதான தேவைகள் அடையாளப்படுத்தப்பட்டு தேவைகளை நிறைவேற்றுவதற்கான முன்னேற்றங்களும் உரிய திணைக்களங்களால் பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றன.

இவ் கிராம தேவைகளில் குளங்கள் திருத்தல், நீர்ப்பாசனம் போன்றவை பெரிய தேவைகளாகவும் காணப்படுகின்றன.

அதே போல இவ் இரு மாதங்களில் உத்தியோகத்தர்களுக்கான வியா-பாரத்திட்டமிடல் பயிற்சியும், வலது குறைந்தோர் தொடர்பான பயிற்சிநெயிகளும் நடாத்தப்பட்டுள்ளன.





# தேவபுரம்

## ஒரு கிராமத்தின் வரலாறு

தேவபுரம் கிராமத்தில் 1954ம் ஆண்டு காலப்பகுதியிலேயே குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அக்காலப்பகுதிகளில் இடப்பற்றாக்குறை நிமித்தம் மக்கள் தாமாகவே வழி வழியாக வந்து குடியேறினார்கள். ஆரம்பத்தில் 100 குடும்பங்கள் எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் குடியேறினர். இந்நிலையில் 1955களில் LDO நிறுவனத்தினால் களிமண்ணால் அமைக்கப்பட்ட வீடுகளும் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் 1971களில் அரசாங்கத்தினால் பொதுக் கிணறுகள் வழங்கப்பட்டதோடு மக்களுக்கு பேமிற்களும் வழங்கப்பட்டது. இக்கிராமம் ஆரம்பத்தில் சித்தாண்டிக்குடியென அழைக்கப்பட்டது. இக்கிராமத்தில் வாழ்ந்த தேவநாயகம் என்பவர் 1975ம் ஆண்டில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அக்கிராமத்தில் காணப்பட்ட புகையிரத தரிப்பினை புனர்நிர்மானம் செய்து அப்புகையிரத தரிப்பிடத்திற்கு ''தேவபுரம்'' என பெயரிடப்பட்டது.

1990களில் யுத்தம் ஏற்பட்டதன் காரணமாக மக்கள் தேவபுரத்தை நோக்கி சென்றனர். புகையிரத நிலையத்தை கடந்த பிரதேசமே தேவபுரம் என அழைக்கப்பட்டது. இக்கிராமத்தின் கல்வி நிலையினை நோக்குகையில் இங்கு அவ்வுராரே தாமாக முன் வந்து தமது பணங்களை செலவிட்டு அடிப்படை வசதிகளற்ற நிலையில் ஓலைக்குடிசைகளில் கல்வியை கற்றனர். ஆசிரியர்கள் ஊதியங்களற்ற நிலையிலேயே கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பின்னர் 1954ம் ஆண்டிலேயே அரசாங்கத்தினால் பாடசாலைகான பதிவு மேற்கொள்ளப்பட்டது. 1964ம் ஆண்டில் அரசாங்த்தினால் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாடசாலை அமைக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆசிரியர்களுக்கும் ஊதியமும் வழங்கப்பட்டது. தற்போது கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய பாடசாலையாக காணப்படுகின்றது. இப்பாடசாலையானது 1 – 5ம் தரம் வரையான மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு கல்வி முறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதைக் காணலாம். வழி வழியாக தாமாகவே குடியேறி முன்னேறி வந்த தேவபுரம் கிராமத்தில் அடுத்து சுகாதார வசதியினை நோக்குமிடத்து ஆரம்பத்தில் வைத்திய சாலைகள் காணப்படவில்லை. இந்நிலையில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர். பின்னர் 2005ல் ''வேல்ட் விஷன்'' நிறுவனத்தினால் வைத்தியசாலையொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதனால் மக்கள் பல நன்மைகளை அடைந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து மக்களின் அடிப்படை வசதிகளான கிணறுகள், மலசலகூடங்கள், வீடுகள் தொடர்பாக நோக்குகையில் ஆரம்பத்தில் எதுவித வசதிகளுமின்றி வாழ்ந்து வந்தாலும் 1954ல் L.D.O நிறுவனத்தினால் களிமண் வீடுகளும் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 1987ம் ஆண்டு அரசாங்கத்தினால் நிரந்தரமாக சில வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 2008ம் ஆண்டு கிணறு, மலசலகூடங்கள் என்பன நிறுவனங்களினூடாக வழங்கப்பட்டது. ஆனாலும் தற்போதும் 100ற்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பன அற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இக்கிராம மக்களின் போக்குவரத்து வசதியினை அதாவது வீதி வசதிகளை நோக்கினால் ஆரம்பத்தில் மணல் வீதிகளே காணப்பட்டது. 1974களில் அரசாங்கத்தினால் வீதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. 2005ம் ஆண்டு ''வேல்ட் விஷன்'' நிறுவனத்தினால் மேலும் சில வீதிகள் மேம்படுத்தப்பட்டது. இருந்த போதிலும் சில வீதிகள் இன்றுவரை சீர்செய்யப்படாமல் மணல் வீதிகளாகவே காணப்படுகின்றன.
கட்டிட வசதிகள் பற்றி பார்க்குமிடத்து ஆரம்பத்தில் பொதுச் சேவைக் கட்டிடங்கள் அமைக்கப் படவில்லை. 1994ம் ஆண்டு கிராமிய அபிவிருத்திச் சங்க கட்டிடம் அமைக்கப்பட்டது. 1995ம் ஆண்டு முன்பள்ளிக் கட்டிடம் தடாகத்தினால் கட்டப்பட்டது. 2000ம் ஆண்டு ஐஸ் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2005ம் ஆண்டில் ''நெக்டெப்'' நிறுவனத்தால் பொதுக் கட்டிடமொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. தற்போது காலசார மண்டபமொன்று பிரதேச சபையினால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## Birthday Wishes

**June**

- E.Pushparajah
- M.S.Ragupathy
- J.Sairajan
- S.Ravichandran




**July**

- V.Manoharan
- M.Tharmeshwaran
- K.Thusendran
- A.Ithayarani
- A.Chandran
- S.Sasitharan
- P.Jasitharan

## நெசவுச்சாறி

பாலமுனை நடுவோடை கிராமத்தில் பெண்களுக்கான நெசவுச்சாறியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு
Tel- 0653658049

---

### எழுதப்பட்ட உரிமைகள் சாசனம்

ஒவ்வொருவருக்கும் நடமாடும் சுதந்திரத்திற்கும் அவர்கள் வதியும் நாட்டின் எல்லைக்குள் வதிவதற்கும் உரிமையுடையவராவர்.

-அனைத்து மனித உரிமை பிரகடன உறுப்புரை 13(1)-

### வாழும் உரிமை தொடர்பாக

வாழும் சுயாதீன உடலியல் ரீதியான பாதுகாப்பு உரிமை அனைவருக்கும் உள்ளது.

- அனைத்து மனித உரிமைகள் பிரகடனம்- விதி (3)

**Further Details**
**0775279290**

**Entrance Free**

## Marketing Fair

**Date : 07.08.2010**
**Venue : Selvanayaham Memorial Hall**